விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 246 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 06 திங்கட்கிழமை (22.08.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## 253 ரூபாயால் மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பு

(கொழும்பு)
மண்ணெண்ணெய் விலையை அதிகரிக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.
அந்த வகையில் மண்ணெண்ணெய் 11

## கொரோனா
## யாழ்.போதனாவில் 7 பேர் அனுமதி

(யாழ்ப்பாணம்)
கொரோனாத் தொற்றுக்கு உள்ளான 7 பேர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக யாழ். போதனா வைத்தியசாலையில் கொரோனா தொற்று கட்டுப்பாட்டுப் பிரிவு நேற்று வெளியிட் 11

## தேவைக்கு அதிகமாக
## சேகரிக்கப்படும் முட்டைகள் அரசுடமையாக்கப்படும்
### அமைச்சர் நளின் பெர்னாண்டோ

(கொழும்பு)
உற்பத்தியாளர்களினால் தேவைக்கு அதிகமாக அநாவசியமாக சேகரிக்கப்படும் முட்டைகள் அரசுடைமையாக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
முட்டைக்கான கட்டுப்பாட்டு விலையை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் இதன் போது குறிப்பிட்டார்.
கடந்த 19ஆம் 11

## அரசியலிலிருந்து ஓய்வுபெற மாட்டேன்
### முன்னாள் ஜனாதிபதி மகிந்த



(கொழும்பு)
தற்போதைக்கு அரசியலிலிருந்து ஓய்வுபெறப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
"நான் அரசியலில் இருப்பேன். உரிய நேரத்தில் தான் ஓய்வு பெறுவேன். 11

## வேலை செய்யாத அரச ஊழியர்கள்
# உடனடியாக வீடு செல்லுங்கள்
### ரணில் காட்டமாகத் தெரிவிப்பு



- வேலை செய்யாத அரச ஊழியர்கள் உடனடியாக வீடு செல்லுங்கள்.
- வேலை செய்யாத அரச ஊழியர்களுக்கு பணம் தர முடியாது.
- வேலை செய்யாத அரச ஊழியர்களின் பொறுப்பை மாவட்டச் செயலாளர் ஏற்க வேண்டும்.
- அரசு யாருக்கும் இலவசமாக உணவளிக்க முடியாது.

(11ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு



(வவுனியா)
வவுனியாவில் லொறியுடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதுண்டதில் இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார்.
நேற்று அதிகாலை 12.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற 11

## சீன கப்பல் விவகாரம்
## இலங்கையின் நிலைமையை இந்தியா புரிந்து கொள்ளும்
### அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ



(அஹமதாபாத்)
இலங்கையின் நிலைமையை இந்தியா புரிந்து கொண்டுள்ளதால், கப்பல் 11

## நெருக்கடிக்கு நானும் பொறுப்பு நாட்டை மீட்க ரணிலே சிறந்தவர்
### முன்னாள் ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)
நாட்டின் நெருக்கடிக்கு நானும் பொறுப்பு எனத் தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நாட்டை மீட்க ஜனாதிபதி ரணிலே சிறந்தவர் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.
ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மாத்திரம் நாட்டின் இந்த நிலைமைக்கு பொறுப் 11

## வசந்த முதலிகே கைது
## ஐ.நா அறிக்கையாளர் ஆழ்ந்த கவலை வெளியீடு

(கொழும்பு)
அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமை குறித்து மனித உரிமை பாதுகாவலர்களிற்கான ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் மேரி லோலர் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார். 02

## கொரோனா 4 மரணம்

(கொழும்பு)
இலங்கையில் மேலும் 4 பேர் கொரோனாத்தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.
அதன்படி, நாட்டில் பதிவான மொத்த கோவிட் இறப்புகளின் எண்ணிக்கை 16,654 ஆக அதிகரித்துள்ளது. 07

## பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின்
## உத்தேச மறுசீரமைப்பு திட்டம் முன்னெடுக்கப்படும்
### எரிசக்தி அமைச்சர் காஞ்சன

(கொழும்பு)
பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உத்தேச மறுசீரமைப்புத் திட்டத்திற்கு தொழிற்சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.
எவ்வாறாயினும் அதற்கான நடவடிக்கைகள் தொடரும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச் 02

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தூரநோக்குடன் செயற்படும் ரணிலால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்

## மிஹிந்தலை ரஜமஹா விஹாராதிபதி



**(கொழும்பு) தூரநோக்குடன் செயற்படும் தலைவர் என்ற வகையில் இந்த நாட்டின் பொறுப்பை ஏற்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் நிச்சயம் நாட்டைக் கட்டியெழுப்புவார் என மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் விஹாராதிபதி கலாநிதி வண. வலவாஹெங்குனவெவே தம்மரதன நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.**

நேற்று முற்பகல் மிஹிந்தலை புனித் தலத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி அவர்கள் சமய வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார். மேலும் விஹாராதிபதி கலாநிதி வண. வலவாஹெங்குனவெவே தம்மரதன நாயக்க தேரரை சந்தித்து நலம் விசாரித்த போதே தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஒரு விடயம் நடக்கவேண்டுமாயின் தகுதியானவர்களுக்கே அது வழங்கப்பட வேண்டும்" என்ற வார்த்தைகளை உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள், இன்று இந் நாட்டின் காவலராக மாறி நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்பை சுமந்து வருவதாகக் குறிப்பிட்டார்.

மஹாசங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசி வழங்கியதுடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு "மிஹிந்தலா நினைவுச் சின்னமும்" வழங்கிவைக்கப்பட்டது. (ம-7)




### ஐ.நா. அறி...

தனது டுவிட்டர் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது

மனித உரிமை பாதுகாவலர்கள் வசந்த முதலிகே, ஹ்சான் ஜீவந்த கல்வே, ஸ்ரீதம்ம ஹிமி ஆகியோர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறித்து நான் ஆழ்ந்த கவலையடைந்துள்ளேன்.

ரணில் தடுத்துவைப் பதற்கான உத்தரவில் கைச்சாத்திடக்கூடாது அப்படி செய்தால் அது இலங்கைக்கு மோசமான நாளாக அமையும் என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

### உத்தேச...

சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் முன்மொழியப்பட்ட மறுசீரமைப்புத் திட்டம் குறித்து தொழிற்சங்கங்களுக்கு முன்னரே அறிவிக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
076 097 3127

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 - 09 - 1980

மறைவு 02 - 09 - 2021



### அமரர் தியாகராசா மதனபாதம்

(சாரதி, வடபிராந்திய போக்குவரத்துச் சபை -CTB)

*கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்*
*எம் முன்னே உம் முகம் எந்நாளும் உயிர்வாழும்*
*மண் விட்டு மறைந்த நீங்கள் விண்ணோக்கிச் சென்றாலும்*
*கண்விட்டு மறையாமல் எம் நெஞ்சமதில்*
*எப்பொழுதும் இருப்பீர் ...*

(12517)

கடந்த 02.09.2021 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி 22.08.2022 இன்று திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தனத்தியவத்தை, மனோகரா,
நெல்லியடி.
077 111 8476
தகவல் குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை கிட்டிணபிள்ளை

வரணி இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கிட்டிணபிள்ளை அவர்கள் கடந்த 19.08.2022 (வெள்ளிக்கிழமை) அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும் பரமசாமியின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் யோகம்மாவின் அன்புக் கணவரும் நிர்மலா, நிதிகரன் (லண்டன்), நிசோதா (லண்டன்), நிதர்சன் (மாவட்ட இணைப்பதிகாரி மாவட்டச் செயலகம் - கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கதிர்செல்வன், சரண்யா, விமலதாசன், தர்சிகா ஆகியோரின் பாசமிகு மாமனும் நிலோஜினி, நிஜன், நிஜாஸ், நியானா, நிதுயன், நிலா, நிகாஸ், நிவீன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.08.2022) திங்கட்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இயற்றாலை இந்து ஊத்தல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-4774)

நிதிகரன் (மகன்) 074 321 2048
நிதர்சன் (மகன்) 076 349 0279
நிர்மலா (மகள்) 077 997 1543

தகவல் :- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடளாவிய ரீதியில் முட்டை விநியோகம் இடைநிறுத்தம்

## தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

(கொழும்பு)

**நாடளாவிய ரீதியில் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் முட்டை விநியோகம் இடை நிறுத்தப்பட்டுள்ளது என கோழிப் பண்ணை வியாபாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.**

முட்டைக்கு அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டதன் பின்னர் இவ்வாறு முட்டை விநியோகம் இடை நிறுத்தப்படுகின்றது.

முட்டைக்கு அரசாங்கம் நிர்ணயித்த அதிகபட்ச சில்லறை விலைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக அந்த சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக நாடு முழுவதும் முட்டைக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும்.

முட்டைகளை அரசு நிர்ணயித்துள்ள கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்தால் வியாபாரத்தில் நட்டம் ஏற்படுவதோடு, வியாபாரத்திற்கு தேவையான கால்நடை தீவனம், போக்குவரத்து கட்டணங்கள் இதை விட அதிகமாக செலவாகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வெள்ளை முட்டை ஒன்றின்



கட்டுப்பாட்டு விலை 43 ரூபாவாகவும் சிவப்பு நிற முட்டை ஒன்றின் விலை 45 ரூபாவாகவும் அரசாங்கம் நிர்ணயித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# இம்மாத இறுதிக்குள் உ/த பரீட்சை முடிவுகள்

(கொழும்பு)

கடந்த பெப்ரவரி மாதம் நடை பெற்ற கல்விப் பொதுத் தராதர உயர் தரப்பரீட்சை முடிவுகளை இந்த மாத இறுதியில் வெளியிட முடியும் என பரீட்சைகள் ஆணை யாளர் எல்.எம்.டி.தர்மசேன தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பரீட்சையில் பாட சாலைகள் ஊடாக 2 இலட்சத்து 79 ஆயிரத்து 150 மாணவர்கள் தோற்றியதுடன் தனிப்பட்ட ரீதியில் 66 ஆயிரத்து 150 பேர் தோற்றியுள்ளனர். மொத்தமாக உயர் தரப்பரீட்சையில் இம் முறை 3 இலட்சத்து 45 ஆயிரத்து 300 பேர் தோற்றியுள்ளனர்.

கடந்த முறை நடைபெற்ற உயர் தரப்பரீட்சை முடிவுகளை வெளியிட ஆறு மாதங்கள் சென்றதுடன் இம் முறை 5 மாதங்களில் பரீட்சை பெறுபேறுகளை வழங்க எதிர்பார்த்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

# கசிப்புடன் ஒருவர் கைது


(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தம்புதோட்டம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் கசிப்புடன் சந்தேக நபர் ஒருவர் கைதாகியுள்ளார்.

சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஒன்றரை போத்தல் கசிப்புடன் ஒருவர் கைதாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (4-30)

# போதை பாவனைக்கு எதிராக சங்கானையில் கவனயீர்ப்பு



(அராலி)

சங்கானை பேருந்து நிலையத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நடைபெற்றது.

போதைவஸ்தினை ஒழிக்குமாறு கோரி இந்த போராட்டமானது முன்னெடுக்கப்பட்டது. பன்னாட்டு புகையிலை நிறுவனத்தின் வரி மோசடிக்கு உடந்தையாக இருந்தவர்களை அம்பலப்படுத்துங்கள், யாழில் தடை செய்யப்பட்ட போதை ஊசி மருந்து பாவனைக்கு எதிராக அரசே நடவடிக்கை எடு, மது நிறுவனங்களுக்கு இளைஞர்களின் எதிர்காலத்தை விற்காதே போன்ற வாசகங்கள் உள்ளடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் சங்கானை பிரதேச இளைஞர் சம்மேளனத்தினர், வலி.மேற்கு பிரதேச சபையினர் மற்றும் இளைஞர் யுவதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (4-18-33-104)

# அரசியல் கைதிகளை விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார்

## நிதியமைச்சர் விஜயதாச

(கொழும்பு)

"முதல் கட்டமாகக் குறிப்பிட்ட சில தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைக்கும். அதன்பின்னர் ஏனைய தமிழ் அரசியல் கைதிகளுக்கும் மன்னிப்பு வழங்கி விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார்" என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியுடனும் என்னுடனும் பேச்சு நடத்தியுள்ளனர். அவர்களின் நியாயமான கோரிக்கை தொடர்பில் பரிசீலித்து வருகின்றோம்.

அதற்கமைய முதல் கட்டமாகக் குறிப்பிட்ட சில தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைக்கும். அதன் பின்னர் ஏனைய தமிழ் அரசியல் கைதிகளுக்கும் மன்னிப்பு வழங்கி விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார்.



தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அவற்றுள் அரசியல் கைதிகள் விவகாரமும் ஒன்று. இதனைக் கருத்தில்கொண்டு அரசு செயற்படும்" எனத் தெரிவித்தார். (4)

# 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களை கண்காணிக்க ஆளுநர் விசேட திட்டம்

(அராலி)

வட மாகாணத்தில் 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களை கண்காணிப்பதற்காக விசேட திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா அறிவுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் உள்ள வயதான முதியவர்கள் உடல் உள ரீதியில் பல்வேறு சவால்களை எதிர் கொள்கின்றனர். ஆரோக்கியம் குன்றுதல், அறிவாற்றல் குறைதல், மனோ நிலையில் பாதிப்பு, பொருளாதார நெருக்கடி, செயல்திறன் குறைவடைதல் போன்றவற்றால் முதியவர்கள் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

இதன் காரணமாக வயது முதிர்ந்தோரின் செயல்திறன் குறைபாடு ஏற்படுவது அவர்களால் தமது அன்றாட கடமைகளைச் செய்ய முடியாத நிலைக்கு அவர்களை தள்ளுகிறது.


பலமின்மை, உடற்சம நிலையின்மை, பார்த்தல், கேட்டல் திறன்கள் குறைவடைதல் மற்றும் நடமாடும் திறனின்மை.

இதற்காக வடமாகாணத்தில் முதியோரின் தேவைகளைக் கணிப்பிடுவதற்கான முன்னோடி ஆய்வு இதுவரை முறையாக அடையாளப்படுத்தப்படாத நிலையில் 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களை அடையாளப்படுத்தும் செயற்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைய வடமாகாண சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை மற்றும் வடமாகாண சமூக சேவைத் திணைக்களம் என்பன இணைந்த வழி நடத்தலின் கீழ் இடம் பெறவுள்ளது. (4-104)

# கோழி இறைச்சிக்கும் கட்டுப்பாட்டு விலை

(கொழும்பு)



கோழி இறைச்சிக்கான கட்டுப்பாட்டு விலையை விதிக்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ள நிலையில்இது தொடர்பான இறுதித் தீர்மானம் விரைவில் எட்டப்படவுள்ளது.

எவ்வாறாயினும், கோழிப் பண்ணையாளர்கள் விலையைக் குறைக்க ஒப்புக் கொண்டால், கட்டுப்பாட்டு விலை அவசியமில்லை என அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களில் பல பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ள அதேவேளை, பருப்பு, உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய் உள்ளிட்ட பொருட்களின் விலையும் குறையும் என கூறியுள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கிரிக்கெட் பிரிவு III - 2022

## அரையிறுதிக்குள் கே.சி.சி.சி., யாழ்.ஜொனியன்ஸ்

இலங்கை கிரிக்கெட்டின் நெறிப்படுத்தலில் யாழ். மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 50 ஓவர் கொண்ட தொடரின் 3 ஆவது காலிறுதிப் போட்டியின் யாழ். ஜொனியன்ஸ் அணி பற்றீசியன்ஸ் அணியை 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணி 34.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 29 ஓட்டங்களைப் பெற்றது.

லிவிங்ரன்-31, பியற்றிக்-22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் யாழ். ஜொனியன்ஸ் அணியைச் சார்ந்த கானாமிர்தன் 8 ஓவர்களில் 17 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் அகிலன் 7.2 ஓவர்களில் 23 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

130 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய யாழ்.ஜொனியன்ஸ் அணி 27.1 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது.



C.P.தனுஜன்-53, ரட்ணம்-26, அபிநாஸ் ஆட்டமிழக்காது 24 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் பற்றீசியன்ஸ் அணி சார்பாக லிவிங்ரன் 8 ஓவர்களில் 23 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் டனிஸியஸ் 6 ஓவர்களில் 33 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து 13 ஆண்டுகளாக நடத்தி வரும் யாழ்.நகரின் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு யாழ். ஜொனியன்ஸ் அணி 7.72 புள்ளிகளையும் பற்றீசியன்ஸ் அணி 1.89 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன.

அதனைத் தொடர்ந்து 4 ஆவது காலிறுதிப் போட்டியில் கே.சி.சி.சி. அணி ஓல்ட்கோல்ஸ் அணியை 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று அரையிறுதி போட்டிக்கு தகுதி பெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கே.சி.சி.சி. அணி களத்தடுப்பை தெரிவு செய்ததன் மூலம் ஓல்ட் கோல்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அவ்வணி 41.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் நிரோஸன்-37, மதுஸன்-34, பிரியலக்ஸன்-35,சிறிகுகன்-24, ஜின்துஸன்-23 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் சாம்பவன் 7.2 ஓவர்களில் 29 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் நிமலதாஸ் 7 ஓவர்களில் 20 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் சத்யன் 8 ஓவர்களில் 21 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் நிருஸ் 7



ஓவர்களில் 29 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

175 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய கே.சி.சி.சி. அணி 33.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சதீயன் ஆட்டமிழக்காது 71 துஸ்யந்தன் ஆட்டமிழக்காது 38 பானுஜன்- 32, பிரவீன் -24 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஓல்ட்கோல்ஸ் அணியைச் சார்ந்த ஜின்துஸன் 10 ஓவர்களில் 46 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.


இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து 13 ஆண்டுகளாக நடத்திவரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு கே.சி.சி.சி. அணி 8.26 புள்ளிகளையும் ஓல்ட்கோல்ஸ் அணி 2.24 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (4)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2694

**கவின்**




**றஜீவன்**




**பிரியன்**




**நிருசா**

கடவுள் ஒருநாள் ஒரு மனிதனின் Memoryஅனைத்தையும் Delete செய்துவிட்டு ஒரு கேள்வி கேட்டார்.இப்ப உனக்கு ஏதாவது ஞாபகத்தில் இருக்கா அவன் உடனடியாக தன் மனைவி பெயரைச் சொன்னான். கடவுள் வேதனைப்பட்டார். Complete Format அடிச்ச பிறகும் வைரஸ் போக மாட்டேங்குது.

**ஹம்சா**




**வெண்பா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 22 ஆவது திருத்தச் சட்டம்
## பெரமுன எம்.பி.க்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

**இரட்டைக் குடியுரிமை உள்ளவர்களுக்கு தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை பறிக்கும் வகையில் அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தத்திற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு எதிர்ப்பு தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

மேலும் 22 ஆம் திருத்தச் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முயற்சித்தால் அதற்கு எதிராக வாக்களிக்க சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

தனிநபர்களை இலக்கு வைத்து இவ்வாறான சரத்துக்களை அரசியலமைப்பில் உள்ளடக்குவது நியாயமானதல்ல என்பதோடு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் கொண்ட பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களின் ஆதரவு அவசியமானது எனவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை பாராளுமன்றத்தை கலைப்பதற்கு அரசியலமைப்பு ரீதியாக ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், அதனை நான்கரை ஆண்டுகளாக திருத்துவதற்கான பிரேரணையை பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று சமர்ப்பிக்கத் தயா ராகி வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (4)

# அத்தியாவசிய மருந்து பொருட்களை இலங்கைக்கு வழங்கிய ஆஸ்திரியா




(கொழும்பு)

ஆஸ்திரியா அரசாங்கம் 4 மில்லியன் ரூபா பெறுமதி யான அத்தியாவசிய மருத்துவப் பொருட்களை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

27 அத்தியாவசிய மருத்துவப் பொருட்கள் அடங்கிய உதவிப் பொதி, இந்தியாவுக்கான ஆஸ்திரியா தூதுவரினால், இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ் தானிகர் மிலிந்த மொரகொடவிடம் கையளிக்கப்பட்டது.

இலங்கையில், அவசரமாகத் தேவைப்படும் மருந்துகளுக்காக இலங்கை அரசாங்கம் வெளிநாடுகளுக்கு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க இந்த மருத்துவப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. (4)

# மாடியிலிருந்து தவறி வீழ்ந்து ஒருவர் பலி

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி - 19 ஆவது ஒழுங்கையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டடத்தில் இருந்து தவறி விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தக் கட்டடத்தின் 16 ஆவது மாடியில் இருந்து நேற்று முன் தினம் இரவு தவறி விழுந்ததில் குறித்த நபர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (4)

# சராசரி சம்பளம் வாங்கும் நாடுகளின் பட்டியல் வெளியீடு

## இலங்கைக்கு கடைசி இடம்

(கொழும்பு)'

உலகில் சராசரி சம்பளம் வாங்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு கடைசி இடமும் தொடர்ந்து முதலிடத்தில் சுவிட்சர்லாந்தும் இடம்பிடித்துள்ளன. CEOWORLD இதழ் வரிக்குப் பிறகு சராசரி நிகர சம்பளங்களின் பட்டியலை வெளியிட்ட நிலையிலேயே இந்த தரவிபரம் தெரியவந்துள்ளது.

இந்த பட்டியலில் வெளியான தகவலின்படி , முதல் இடத்தில் உள்ள சுவிட்சர்லாந்தில் சராசரி மாத நிகர சம்பளம் 6,142.10 அமெரிக்க டொலர்களாகும். இதேவேளை சிங்கப்பூர் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. அதன் சராசரி மாத நிகர சம்பளம் 4,350.79 அமெரிக்க டொலர்களாகும்.

சிங்கப்பூரை தொடர்ந்து, அவுஸ்திரேலியா (US$4,218.89), அமெரிக்கா (US$3,721.64) மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் (US$3,663.27) ஆகியவை முறையே மூன்றாவது,நான்காவது, ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளன.

எனினும் இதற்கு நேர்மாறாக, குறைந்த சராசரி மாதாந்த நிகர் சம்பளத்துடன் இலங்கை கடைசி இடத்தை பிடித்துள்ளது. அங்கு சராசரி மாதாந்த நிகர சம்பளம் 143.62 அமெரிக்க டொலர் என்று அறிக்கை தெரிவிக்கிறது. அதாவது, இலங்கை பணமதிப்பில் ரூபாய் 51716.08 ஆகும். (4)


ஓடு விற்பனைக்கு

தென்மராட்சி கச்சாய் தெற்கில் அமைந்திருக்கும் கோயில் ஒன்றில் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றமையால் அக்கோயிலில் கழற்றப்பட்ட கிட்டத்தட்ட 5000 அளவிலான ஓடுகள் விற்பனைக்கு உண்டு.

தேவை யானோர் தொடர்பு கொள்ளவும்.

விலை பேசித் தீர்மானிக்கலாம்.

(அ-47772)

தொடர்புக்கு:
077 220 8366
077 687 2727

ஆலய பரிபாலனசபை.


# இராசிபலன்

22.08.2022
ஆவணி 06, திங்கட் கிழமை
ஏகாதசி முழுவதும்

மிருகசீரிடம் முற்பகல் 10.28 மணிவரை
சுபநேரம் 12.05-1.35 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை

அமிர்த சித்தம்
சந்திராஷ்டமம் -
அனுசம்

வள்ளவன்




கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு.




அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.




எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.




பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், அலைச்சல்களால் மனச்சோர்வு ஏற்படலாம்.




தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.




அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், திறமைகள் வெளிப்படும் நாள், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், ஆரோக்கியமான நாள்.




எதிர்பாராத சில சம்பவங்கள் நடைபெறும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.




உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் நிலை ஏற்படலாம், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், வரவும் செலவும் சமமாகும் நாள்.




குடும்பத்தினரிடையே குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும்.




உறவினர் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், போசன சுகமுண்டு.




பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.




மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பேச்சில் கனிவு பிறக்கும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள்.

பிறர் பேசுவதை நாம் காதாலும் இதயத்தாலும் கேட்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

அம்புலிமாமா

## நன்றிக்கடன்



அவனும் அவற்றோடு வீட்டை அடைந்தான். பொன்னன் தன் இரு தங்கைகளின் திருமணங்களைச் செய்து விட்டு கொஞ்சம் நிலம் வாங்கிப் போட்டான். இவ்வாறு தன் குடும்பப் பிரச்சினைகளை எல்லாம் தீர்த்துவிட்டு பிசாசிடம் போவது பற்றி யோசித்தான். தான் பிசாசிற்குத் துணையாக இருக்க வேண்டும் என்றால் தற்கொலை செய்து கொண்டு பிசாசாக மாற வேண்டும் என்று எண்ணினான்.

அவன் தற்கொலை செய்து கொள்ளும் நோக்கத்தோடு ஊருக்கு வெளியே உள்ள உயரமான ஒரு பாறை மீது ஏறினான். அங்கிருந்து குதித்து உயிர் விடுவது அவன் நோக்கம். ஆனால் அவன் பாறையின் உச்சியை அடைந்தபோது அங்கு அழகான பெண் ஒருத்தி நின்று கொண்டிருந்தது கண்டு திகைத்துப் போனான்.

அவள் பெயர் மங்கம்மா. அவள் தன் சிற்றன்னையின் கொடுமை தாங்காமல், தன் சிற்றன்னை தன்னை ஒரு பணக்காரக் கிழவனுக்கு கல்யாணம் செய்து வைக்க முடிவு செய்தது கண்டு தன் ஊரிலிருந்து யாருக்கும் தெரியாமல் வந்து விட்டாளாம். அவளும் தற்கொல்ல செய்து கொள்ளும் நோக்கத்தோடு அங்கு வந்திருப்பதாகப் பொன்னன் தெரிந்து கொண்டான்.

இருவரும் தம் பிரச்சினைகளைப் பரிமாறிக் கொண்டனர். அப்போது மங்கம்மா "நல்லவர்கள் இறந்தால் சொர்க்கத்திற்குப் போவார்கள். நீங்கள் தற்கொலை செய்து கொண்டாலும் பிசாசாக மாறமாட்டீர்கள். எனவே எனக்கு உதவ என்னை மணந்து கொள்ளுங்கள்" என்றாள்.

அப்போது பொன்னன் "உன்னை நான் மணக்கத் தயார். ஆனால் அந்தப் பிசாசிற்கு நன்றிக் கடன் செலுத்த வேண்டுமே" என்றான் .மங்கம்மாவும் "அதற்கென்ன? நாம் திருமணம் செய்து கொண்டு அந்த மரத் தடியிலே வீட்டைக் கட்டிக் கொண்டு வாழலாம். நீங்கள் அப்பிசாசிற்குத் துணை இருப்பது போலாகிவிடும்" என்றாள்.

பொன்னனுக்கு மங்கம்மா சொல்வது சரி என்றே பட்டது. அவர்களிருவரும் கடவுளை மனதில் தியானித்துக் கொண்டு கணவன் மனைவியாக ஆனார்கள். அதன் பின் பிசாசைக் காண அவர்கள் அந்த மரத் தடிக்குச் சென்றார்கள்.

அப்போது அவர்களின் முன் ஒரு தேவ புருஷன் தோன்றினான். அவன் அவர்களிடம் "நான் ஒரு சாபத்தால் பிசாசாகி இந்த மரத்தில் இருந்து வந்தேன்.

நற்குணம் படைத்து தியாக மனப்பான்மை கொண்ட உன்னால் எனது சாபம் விலகிவிட்டது. நீங்கள் இருவரும் இங்கு வருவீர்கள் என்றே காத்திருந்தேன். நீங்கள் சுகமாக வாழ்வீர்களாக!" என்று ஆசி கூறிவிட்டு மறைந்து போனான். போகுமுன் அவர்களுக்குத் தன் அன்பளிப்பாக இரு பைகள் நிறையத் தங்க நாணயங்களைக் கொடுத்துவிட்டுச் சென்றான்.

பொன்னன் மங்கம்மாவைத் தன் ஊருக்கு அழைத்துச் சென்றான். அங்கு அவன் தாய் தந்தையரோடும் மனைவியோடும் ஒரே வீட்டில் வசித்து நிலபுலன்களை கவனித்துக் கொண்டு சுகமாக வாழ்ந்தார்கள். மங்கம்மாவுக்கும் அவனுக்கும் முறைப்படி விவாகம் நடைபெற்றது.

(முற்றும்)

# சிலப்பதிகாரம்

## மதுரமான வாழ்வு தேடி...




சுவையான விடயங்கள் கூட சில நேரம் தலையில் அடித்தாற்போல சில விடயங்களை நமக்கு உணர்த்தும்.

கோவலனுக்கு ஆச்சரியமாக இருந்தது. கவுந்தி அடிகள் சொல்லும் விடயங்கள் எதேச்சையானவைதானா? மாதவியின் அழகில் மயங்கித் தவறான வழியில் போனதை அவர் சொல்வதில் சம்பந்தப்படுத்த முடிகிறதே? மாதவியின் நடவடிக்கைகளிலிருந்தே பாடமும் படிக்க முடிந்ததே? அதையும் இவர் மறைமுகமாகக் குறிப்பிடுகிறாரா?

கவுந்தி அடிகள் தொடர்ந்தார். 'செண்பகப் பூக்கள் நிரம்பிய குழியையும் நெற்றியில் இடிக்கும் பலாவையும் மட்டுமே கவனித்துக் கொண்டு நடந்தால் பழுத்த பலாச் சுளைகளிலிருந்து விழுந்த பலாக் கொட்டைகள் கால்களில் உறுத்தும் துன்பங்கள் அடுக்கடுக்காக வரும் தன்மையுடையவை'.

கவுந்தி அடிகள் பேசப் பேச கண்ணகியும் கோவலனும் சுவாரஸ்யமாகக் கேட்டபடி தொடர்ந்து நடந்தார்கள். 'இவ்வளவு சிரமப்பட்டு சோலை வழியில் நடப்பதற்குப் பதிலாக வயல் வழியில் நடந்துவிட்டால் என்ன?

'அங்கேயும் இடர்கள் உண்டு மகனே களை பறிப்பவர்கள் பிடுங்கி எறிந்த குவளை மலர்களுக்குள் வண்டுகள் உறங்கக் கூடும் அவற்றை மிதித்து அவற்றை நாம் இம்சைக்கு ஆளாக்கக் கூடும்.'

கவுந்தி அடிகள் சமணத்துறவி என்பதை இது உணர்த்துகிறது. எந்த உயிருக்கும் துன்பம் விளைவிக்கக்கூடாது என்பதில் கவனம் உள்ளவர்கள் சமணத் துறவிகள். கையில் மயில் தோகையை வைத்துக்கொண்டு நடக்கும் வழியை விசிறிக் கொண்டே செல்வார்கள்.

மூவரும் சில மணி நேரம் நடந்தபிறகு சில சாரணர்கள் எதிர்ப்பட்டார்கள். சமணத்தில் இல்லறத்தில் இருப்பவர்களை சாவகார்கள் என்றும் துறவறம் மேற்கொண்டவர்களை சாரணர்கள் என்றும் குறிப்பிடுவார்கள். கோவலன், கண்ணகி, கவுந்தி அடிகள் மூவரும் சாரணர்களின் கால்களில் விழுந்து ஆசி பெற்றார்கள்.

அந்தச் சாரணர்களின் தலைவர் முக்காலமும் உணர்ந்தவர். கோவலனுக்கு நிகழ்ந்தவை, அவர்கள் எதற்காக மதுரை செல்கிறார்கள் என்பது அனைத்தையும் தன் ஆன்ம சக்தியால் உணர்ந்தார். இனிமேல் அவர்களுக்கு நடக்க இருப்பதையும் அறிந்தார்.

ஆயினும் நேரடியாக எதுவும் சொல்லாமல் 'கவுந்தி அடிகளே தீவினைகளை வேண்டாம் என்று விரட்டினாலும் அவை வந்தே தீரும்' என்று குறிப்பாக உணர்த்தினார்.

'அதை நான் அறிவேன்' என்றார் கவுந்தி அடிகள். பாவம் கோவலனும் கண்ணகியும் தான் அதை அறியவில்லை!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 57

இது பழமையான கட்சிகளில் ஒன்றாகும் மற்றும் 1991 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டபோது சோவியத் காலத்தின் உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் உறுப்பினர்களால் உருவாக்கப்பட்ட கட்சியாகும். இக் கட்சி 2006 ஆம் ஆண்டுத் தேர்தலில் 1,444, 224 (5.70%) வாக்குகளைப் பெற்று 33 ஆசனாங்களைக்கைப்பற்றியது.

உக்ரைனின் கம்யூனிஸ்ட் கட்சி (Communist Party of Ukraine) என்பது 1991 இல் தடைசெய்யப்பட்ட சோவியத் காலத்தின் உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சியின் வாரிசாக 1993 இல் நிறுவப்பட்ட, ஆரம்பத்தில் தடைசெய்யப்பட்டிருந்த உக்ரைனிய அரசியல் கட்சியாகும். 2006 ஆம் ஆண்டுத் தேர்தலில் 929,591 (3.67%) வாக்குகளைப் பெற்று 21 ஆசனங்களைக் கைப்பற்றியது.

2004 அரசியலமைப்புத் திருத்தங்களைத் தொடர்ந்து, பெரும்பான்மை அரசாங்கம் என்ற கருத்துக்கு பதிலாக கூட்டணி அரசாங்கத்தின் கருத்துரு என்று மாற்றப்பட்டது. ஆரம்பத்தில் கூட்டணி அரசாங்கம் அமைப்பது தாமதமானது. தேர்தலுக்கு பிந்தைய அரசியலில் கூட்டணி அரசாங்கம் அமைப்பதில் பேரம் பேசல்கள் இடம் பெற்றன.

இறுதியாக ஜுன் 22, 2006 அன்று யூலியா திமோஷென்கோ பிளாக், எங்கள் உக்ரைன் மற்றும் உக்ரைனின் சோசலிஸ்ட் ஆகிய கட்சிகளுக்கிடையே ஜனநாயக கூட்டணியை உருவாக்கும் ஒரு கூட்டணி ஒப்பந்தம் கையெழுத்தானது. இவ்வாறு இருப்பினும், அரசியல் பேரம் பேசல்கள் தொடர்ந்தன. இதனால் புதிய அரசாங்கத்தின் நியமனம் தாமதித்தது.

இத்தாமதம் காரணமாக, சோசலிஸ்ட் கட்சி கூட்டணி ஒப்பந்தத்தில் இருந்து தனது கையொப்பத்தை திரும்பப் பெற்றது. 7 ஜுலை 2006 அன்று பிராந்தியங்கள் கட்சியானது உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தேசிய ஒற்றுமை கூட்டணி என்று அழைக்கப்படும் புதிய கூட்டணி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

ஒகஸ்ட் 3, 2006 அன்று உலகளாவிய தேசிய ஒருமைப்பாட்டின் பிரகடனம் கையெழுத்திடப்பட்டது. உலகளாவிய தேசிய ஒருமைப்பாட்டின் பிரகடனம் என்பது (Universal of National Unity) (இது தேசிய ஒருமைப்பாட்டின் பிரகடனம் என்றும் அழைக்கப்படுகிறது) ஒகஸ்ட் 3, 2006 அன்று உக்ரைன் ஜனாதிபதி விக்டர் யுஷ்செங்கோ மற்றும் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் உக்ரைனிய அரசியல் கட்சிகளின் தலைவர்களால் கையெழுத்திடப்பட்ட (உக்ரைனில் 2006 பாராளுமன்ற நெருக்கடியின் தீர்வைக் குறித்த) ஒரு பிரகடனமாகும்.

உலகளாவிய தேசிய ஒருமைப் பாட்டில் வெளிப்படுத்தப்பட்ட மாநிலக் கொள்கையின் அடிப்படைகளை கட்சிகள் ஒப்புக்கொண்டதை அடுத்து, ஒகஸ்ட் 4 அன்று "எங்கள் உக்ரைன்" தொகுதியின் 30 பிரதிநிதிகளின் ஆதரவுடன் விக்டர் யானுகோவிச் பிரதமராக மீண்டும் நியமிக்கப்பட வழிவகுத்தது.

**ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான அதிகாரப் போட்டி மற்றும் அரசியல் ஊழல் காரணமாக ஜனாதிபதி விக்டர் யுஷ்செங்கோ பாராளுமன்றத்தை முன் கூட்டியே கலைத்தார். இது 2007 இல் பாராளுமன்ற தேர்தல்களுக்கு வழிவகுத்தது.**

### உக்ரைனிய அரசியல் நெருக்கடி - 2006

உக்ரைனில் 2006 ஆம் ஆண்டு முடிவடையாத பாராளுமன்ற நெருக்கடி மார்ச் 2006 இல் பாராளுமன்றத் தேர்தல்களின் விளைவாகத் தொடங்கியது. பிரதமராக இருந்த யூரி யெக்கானுரோ இராஜினாமா செய்த பிறகு விக்டர் யானுகோவிச் (தேசிய ஒற்றுமையின் ஒரு பகுதியாக) பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

யூலியா திமோஷென்கோ பிளாக் கட்சி எங்கள் உக்ரைன் கட்சி மற்றும் உக்ரைன் சோசலிஸ்ட் கட்சி (SPU) உடன் கூட்டணி அமைத்து பிராந்தியங்களின் கட்சி (Party of Regions) அதிகாரம் பெறுவதைத் தடுக்கலாம் என்று பலர் ஊகித்தனர். இருப்பினும், எங்கள் உக்ரைன் மற்றும் SPU ஆகிய கட்சிகளுடனான பேச்சுவார்த்தைகள் பல சிரமங்களை எதிர்கொண்டன.

**மேலும் யூலியா திமோஷென்கோ தான் பிரதமராக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். வெளிப்படையாக ஜனாதிபதி விக்டர் யுஷ்செங்கோ, திமோஷென்கோ பிரதமராக வருவதை விரும்பவில்லை.**

ஆரம்பத்தில் SPU இன் ஒலெக்சாண்டர் மோரோஸ் (Aleksandr Moroz) பாராளுமன்றத்தின் தலைவர் பதவியை விரும்பினார். புதன் 21 ஜுன் 2006 அன்று, உக்ரைனிய ஊடகங்கள் மூன்று கட்சிகளும் இறுதியாக ஒரு கூட்டணி உடன்பாட்டை எட்டியதாக தெரிவித்தது. இது கிட்டத்தட்ட மூன்று மாத அரசியல் நிச்சயமற்ற நிலையை முடிவுக்கு கொண்டு வந்ததாகத் தெரிகிறது என்றது. புதிய பிரதமராக திமோஷென்கோவின் நியமனம் மற்றும் உறுதிப்படுத்தல் பிரச்சினைகள் இல்லாமல் இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

(தொடரும்)

# மரண அறிவித்தல்



அமரர்.திரு. **பொன்னுச்சாமி பழனிவேல் முருகதாஸ்**


யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவின் மெல்பனை வதிவிடமாகவும் கொண்டிருந்த பிரபல தவில் வித்துவான் லயின் ஞானபாரதி, தமிழ் இசைச் செல்வன், தவில் இசை சுடரொளி ஆகிய பட்டங்களைப் பெற்ற பொன்னுச்சாமி பழனிவேல் முருகதாஸ் அவர்கள் 18.08.2022 வியாழக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற தவில் வித்துவான் யாழ்ப்பாணம் சின்ன பழனிவேல் தையளம்பாள் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தவில் வித்துவான் அளவெட்டி கணேஷன் என்கிற கணேஷரட்ணம் - ராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சந்திரவதனி அவர்களின் அன்புக் கணவரும் ஆவார். கார்த்தீபன், கனித்திரா, விதிர்லா, கஜேஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக 21.08.2022 நேற்று ஞாயிற்றுக்கிழமை இல.790, Frangston Dangdidon Road, Belarong Memorial Park இல் பார்வைக் காக வைக்கப்பட்டு அதே இடத்தில் இறுதிக் கிரியைகள் 22.08.2022 திங்கட்கிழமை காலை 10.30 மணி முதல் 1.30 மணியளவில் நடைபெற்றது. இவ் வறிவித்திலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

மேலதிக விபரங்களுக்கு (சி-1780)

கார்த்திக் +61484572260 வதனி +61423352466 கேசவன் +61428829845

# துருக்கியில் அடுத்தடுத்து நிகழ்ந்த சாலை விபத்து

## 32 பேர் பலி, 29 பேர் படுகாயம்



(இஸ்தான்புல்)

துருக்கி நாட்டின் தென்கிழக்கு மாகாணமான காசி யான்டெப் பகுதியில் நேற்று முன்தினம் பயணிகள் பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானது. இதில் 16 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் 20 பேர் காயமடைந்தனர். விபத்து நடந்த பகுதியில் மீட்பு பணியில் தீயணைப்புப் படையினர், மருத்துவக் குழுக்கள் மற்றும் பிற குழுவினர் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அவர்கள் மீது மற்றொரு பேருந்து மோதியது. இதையடுத்து இரு விபத்துக்களிலும் சேர்த்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 32 ஆக உயர்ந்துள்ளதாக துருக்கிய சுகாதார அமைச்சர் ஃபஹ்ரெட்டின் கோகா தெரிவித்துள்ளார்.

இதில் அவசர கால பணியாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்களும் பலியாகினர். காயமடைந்த 29 பேரில் எட்டு பேர் ஆபத்தான நிலையில் உள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார். (4)


# மாநகரசபை, யாழ்ப்பாணம்

## நல்லூர் உற்சவகால தற்காலிக கடைகளுக்கான பிணைப்பணவைப்பு மீளளிப்பு 2014-2017

நல்லூர் உற்சவகால தற்காலிக கடைகளுக்காக செலுத்தப்பட்ட பிணைப் பணம் ஆனது 2014 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை காலமும் கோரப்படாமல் உள்ளது. 2014 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான மீள பெற்றுக் கொள்ளப்படாத பிணைப் பணத்தினை வைப்புக் கணக்கில் இருந்து வருமான கணக்கிற்கு மாற்றம் செய்ய இருப்பதால் இதுவரை காலமும் பிணைப் பணத்தினை பெற்றுக்கொள்ள தவறியவர்கள் தங்களுடைய பிணைப்பண வைப்பு பற்றுச் சீட்டுடன் மாநகரசபை முன்னராங்கு அலுவலகத்தில் 22.09.2022 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும். தவறும்பட்சத்தில் உரிமை கோரப்படாத பிணைப்பண வைப்பானது வருமானத்திற்கு மாற்றப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(C-4770)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்படும் விசா அனுமதிக்காலம் நீடிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் முகமாக நாட்டினுள் அந்நியச்செலாவணியை கொண்டுவர ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தீவிரமான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது.

இதன்படி, தற்பொழுது சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் வகையில் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்படும் விசா அனுமதிக்காலத்தை 270 நாட்கள் முதல் ஒரு வருட காலத்திற்கு நீடிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, சுற்றுலாப் பயணிகளிடம் அறவிடப்படும் விசா கட்டணங்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 180 நாள் விசா அனுமதிக்காக அறவிடப்பட்ட 245 அமெரிக்க டொலர்கள் 35 டொலர்கள் வரை குறைக்கப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மேலும், ஓராண்டு நுழைவு சுற்றுலா விசாவிற்கான கட்டணம் 685 டொலரில் இருந்து 200 டொலராக பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது. (4)

# உலக சந்தையில் அதிகரிக்கும் கச்சா எண்ணெயின் விலை

தற்போது உலக சந்தையில் கச்சா எண்ணெயின் விலை மீண்டும் அதிகரித்து வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி, உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை வார இறுதியில் 0.3 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இந்த விலை உயர் வுக்கு ஏற்ப WTI கச்சா எண்ணெய் பரல் ஒன்றின் விலை 90.77 அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.

அதேவேளை, பிரென்ட் ரக கச்சா எண்ணெய் (Brent crude oil) பரல் ஒன்றின் விலை 96.72 அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் குறித்த கச்சா எண்ணெயின் விலைகளானது குறைவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# 2030 வரை ரணிலே நாட்டின் ஜனாதிபதி

## பாலித ரங்கே சூளுரை



(கொழும்பு)

நாட்டின் ஜனாதிபதியாக எதிர்வரும் 2030 ஆம் ஆண்டு வரை ரணில் விக்கிரமசிங்கவே பதவி வகிப்பார். அதில் எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவர், ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து விலகிச் சென்று உருவாக்கப்பட்ட எந்தவொரு அரசியல் கட்சியும் இதுவரையில் வெற்றி பெற்றதில்லை.

அதே போன்று எந்தவொரு அரசியல் தலைவரும் வெற்றியடைந்ததில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி தொடர்பில் பேசுவது பிரயோசனமற்றது. ஏனைய கட்சிகளுக்கும் அதே நிலைமையே ஏற்படும்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தனித்துச் செல்ல வேண்டிய தேவை கிடையாது. ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பயணிக்க முடியும். எவ்வித பேதங்களும் இன்றி அனைவரையும் ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்றுமாறு அழைப்பு விடுக்கின்றோம் எனத் தெரிவித்தார். (4)


பாராட்டி வாழ்த்துகிறோம்

திருமதி.

சு.மகிழ்னன்




எமது பாடசாலையில் தகவல் தொழில்நுட்ப ஆசிரியராக கடமையாற்றிய திருமதி. சு.மகிழ்னன் 31.07.2022 இலங்கை அதிபர் சேவை தரம் III இற்கு பதவியுயர்வு பெற்றமையை இட்டு வாழ்த்துவதோடு அவர் மேலும் உயர்நிலை பெற்று சிறப்படைய வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/பெரியபுலம் மகா வித்தியாலயம். (12491)


ஓம் நமசிவாய



# திருக்கேதீச்சரம்

## மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு

## கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம் அகில இலங்கை ரீதியாக நடாத்திய சைவ சமய அறிவுப்போட்டி முடிவுகள்

**செல்வன்.அறிவுச்செல்வன் அறிவுஅரங்கன்**
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
❖ முதற் பரிசு - ரூபா 25,000

**செல்வன்.தங்கவடிவேல் வினோதன்**
மு/விசுவமடு மகா வித்தியாலயம்
❖ இரண்டாம் பரிசு - ரூபா 15,000

**செல்வன்.காந்தருபன் கயாணன்**
மு/விசுவமடு மகா வித்தியாலயம்
❖ மூன்றாம் பரிசு - ரூபா 10,000

**ரூபா 1,000 மற்றும் கற்றல் உபகரணங்கள் பரிசாகப் பெறும் 25 மாணவர்களின் பெயர்கள்.**

- செல்வி. சஷ்னிகா கங்காதரன் - கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயம்.
- செல்வன். பரமதயாளன் ஹரிஹரப்பிரியன் - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.
- செல்வி. பிரித்திகா பரணீதரன் - யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை.
- செல்வன். இந்திரஜிற் கார்த்திகன் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
- செல்வி. சுஜானுகா செல்வரத்தினம் - யாழ்/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.
- செல்வி. சஞ்ஜனா பிரதீபன் - கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயம்.
- செல்வன். சுப்பிரமணியம் சாகித்யன் - கொழும்பு இந்துக் கல்லூரி.
- செல்வன். அறிவுச்செல்வன் அறிவுஆதித்தன் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
- செல்வன். சுஜீவன் தயாளன் - யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி
- செல்வன். பரணீதரன் டிசான் - யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.
- செல்வன். கோகுலன் திவ்யேஷ் - கொழும்பு றோயல் கல்லூரி.
- செல்வி. சானுகா சதீஷ்குமார் - திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி.
- செல்வன். பத்மகுமார் இசைப்பிரியன் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.
- செல்வன். திலீபன் முக்கேஷ் - கண்டி, கலஹா அண்ணாமலையார் அறநெறி பாடசாலை.
- செல்வி. சரணியா பத்மராசன் - யாழ்/ வேலணை மத்திய கல்லூரி
- செல்வன். வசந்தன் யுதர்ஷன் - கிளி/ பூநகரி மத்திய கல்லூரி.
- செல்வி. கௌஷிகா குணபாலன் - யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை.
- செல்வன். ரவீந்திரன் ஹரிஹரன் - யாழ்/ மானிப்பாய் இந்துக் கல்லூரி.
- செல்வன். பிரதீபன் சேயவன் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
- செல்வன். அருள்மாறன் விசாகன் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
- செல்வி. ஸ்ரீ பாஸ்கரன் தனுஸ்னவி - யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.
- செல்வி. சந்திரபாலன் பிரவீனா - கொழும்பு இந்து மகளிர் கல்லூரி.
- செல்வி. ஷிபானி கோபிநாத் - யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை.
- செல்வி. சஜானா விஜயசங்கர் - யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை.
- செல்வி. ஆத்மிகா பிரதீபன் - யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.

**மாணவர்களுக்கான பரிசில்கள் 26.08.2022 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும் தெய்வீக திருக்கூட்டம் நிகழ்ச்சியில் வழங்கப்படும்.**

(12488)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவத்தால் நீண்ட உயர் மரங்களேனும்
பருவத்தாலன்றிப் பழா.
– ஔவையார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதி ரணிலின் கச்சேரிக்கு மஹாசங்கம் பக்க வாத்தியம்!

தனியொரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டின் ஜனாதிபதியாகினார் என்றால், அது வியக்கத்தக்க விடயம் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக மக்கள் புரட்சி வெடித்தபோது, அவர் அந்தப் பதவியில் இருந்து விலகுவதற்கு முன்னதாக; ஏலவே அவரால் பிரதமராக நியமிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவை இடைக்கால ஜனாதிபதியாக அறிவித்தார்.

பாராளுமன்றத்தில் ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுன பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருந்தாலும் அதற்குள் ஒருவரை பிரதமராகவும் பின்னர் இடைக்கால ஜனாதிபதியாகவும் நியமிப்பதற்கு ராஜபக்ஷ தரப்பு முன்வரவில்லை.

மாறாக, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராகவும் பின்னர் இடைக்கால ஜனாதிபதியாகவும் ராஜபக்ஷ தரப்பு நியமித்ததெனும் போது, ரணில் விக்கிரமசிங்க மீது ராஜபக்ஷக்களுக்கு இருந்த நம்பிக்கை எத்துணை உயர்வானதென்பது உணர்தற்குரியது.

இவை ஒருபுறமிருக்க ஜனாதிபதி, பதவி விலகியதையடுத்து புதிய ஜனாதிபதியை பாராளுமன்றம் தெரிவுசெய்வதென்ற அரசியலமைப்பின் அடிப்படையில், பொதுஜன பெரமுன சார்ந்த டலஸ் அழகப்பெரும ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிட்டார்.

எனினும் அந்தக் கட்சி அவரை ஆதரிக்காமல், ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்தது என்பது மேலதிக தகவல்.

இவை ஒருபுறமிருக்க, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்பதை காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் எதிர்த்தனர். ஆயினும் அவர்களின் எதிர்ப்புக்கு தென்பகுதியில் போதுமான ஆதரவு கிடைக்காத நிலையிலும் போராட்டக்களத்தில் முனைப்புடன் நின்ற செயற்பாட்டாளர்களைக் கைது செய்து விசாரணை நடத்துகின்ற நடவடிக்கை அரங்கேறியதாலும் ஜனாதிபதி ரணிலுக்கு எதிரான கோசங்கள் தணியலாயின.

இந்த நிலையில், சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது என்ற கோசத்துடன் களமிறங்கிய ரணில் விக்கிரமசிங்க ஏதோ ஒரு வகையில் தனது பலத்தை அதிகரித்து வருகின்றார்.

தனியொரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்து ஆட்சி அதிகாரத்தின் உச்சக்கட்டத்தை அடைந்த ரணில் விக்கிரமசிங்க தனது ஆட்சிக்காலத்தை சுமுகமாக நகர்த்தும் பொருட்டு எப்போதும் ராஜபக்ஷக்களை அனுசரித்துப் போகவேண்டிய தேவை இருக்கும். அவ்வாறான நிலைமையில் ராஜபக்ஷக்களின் கை ஓங்கலாம் என்றபோது; ஜனாதிபதி ரணில் புதிய வியூகத்தை அமைக்கின்றார்.

அதாவது, தனது பாட்டுக் கச்சேரிக்கு ராஜபக்ஷக்களை பக்கவாத்தியமாக வைத்திருப்பது ரசிகர்கள் மத்தியில் எதிர்ப்பை ஏற்படுத்தும்.

எனவே பௌத்த மஹாசங்கத்தை தனக்கான பக்கவாத்தியமாக மாற்றிவிட்டால், பாட்டுக்கச்சேரி களைகட்டும் எனக் கருதினார்.

அதன் எதிர்வினைதான்; ஜனாதிபதி ரணிலுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்ற பௌத்த மஹாசங்கத்தின் கோரிக்கை ஆகும்.

# அம்பாந்தோட்டையில் சீனாவின் கப்பலினை இந்தியா உன்னிப்பாக கண்காணிக்கின்றது

## இந்திய வெளியுறவுத்துறை இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

இலங்கையில் தற்போது நிறுத்தப்பட்டுள்ள சீன உளவுக் கப்பலை இந்திய அரசு உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக இந்திய வெளியுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் வீ. முரளிதரன் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த இந்திய அரசு சரியான நேரத்தில் செயல்படும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

திருச்சியில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த அவர், சர்வதேச அளவில் கச்சதீவை மீட்பதற்காக இந்திய அரசு நீதித்துறை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

எனவே, இந்த விவகாரம் குறித்து அதிகம் பேசுவது பொருத்தமற்றது என்றும் அவர் கூறினார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தற்போது நிறுத்தப்பட்டுள்ள சீன உளவுக் கப்பல் குறித்த கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், நிலைமையை மத்திய அரசு உன்னிப்பாக கவனித்து வருகிறது.

தேசிய பாதுகாப்பு விடயத்தில் எந்தவித மென்மையான அணுகுமுறையும் இருக்காது என்றும் அமைச்சர் கூறினார். (ம-7)

## நல்லூரில் நாளை மறுதினம் சித்திரத் தேர் வெள்ளோட்டம்

சரித்திரப் புகழ்மிக்க யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் புனருத்தாரணம் செய்யப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 7 மணி முதல் இடம்பெறவுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பரிபாலகர்களான மாப்பாண முதலியார் பரம்பரையில் வந்துதித்த மூன்றாம் இரகுநாத மாப்பாண முதலியார் காலத்தில் ஆலயத்துக்கான முதலாவது தேர் உருவாக்கப்பட்டது.

அதன் பின்னர் இரண்டாம் ஆறுமுகமாப்பாண முதலியார் அழகன் முருகனுக்கான தங்க ஆபரணங்கள் மற்றும் வெள்ளிசிங்காசனம் ஆகியவற்றைச் செய்து அழகன் முருகனை அழகு பார்த்தார். இவரது காலத்தில் சண்முகப் பெருமான் ஸ்தாபிக்கப்பட்டதுடன், சண்முகரே தேரில் ஏறி பக்தர்களுக்கு அருள் பாலிக்கவும் தொடங்கினார்.

நல்லூரில் பாவனையில் இருந்த தேர் பழுதடைந்த நிலையில் இருந்த காரணத்தினால், அதன் அபாயத்தை உணர்ந்த ஷண்முகதாஸ் மாப்பாண முதலியார், புதிய தேர் ஒன்றை 1964 ஆம் ஆண்டு திருப்பணி நிறைவேற்றி, தானும் வடம் பிடித்து இழுத்து இரதோற்சவத்தை இன்னும் அழகாக்கினார்.

அந்தத் தேரே மீண்டும் புனருத்தாரணத் திருப்பணி நிறைவுற்று எதிர்வரும் 24 ஆம் திகதி, புதன்கிழமை காலை 7 மணிக்கு வெள்ளோட்டம் காணவுள்ளது. (ம-7)

## பாறையிலிருந்து தவறி விழுந்த பேராதனை விரிவுரையாளர் பலி

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் குழுவுடன் மாவனெல்ல உதுவம்கந்த பாறையில் ஏறியபோது, 300 அடி உயரமான பாறையில் இருந்து தவறி வீழ்ந்து பேராதனை பல்கலைக்கழக விவசாய பீடத்தின் இளம் உதவி விரிவுரையாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அல்பிட்டிய பகுதியைச் சேர்ந்த விரஸ்மி கொடிதுவக்கு என்ற 27 வயதுடைய யுவதியே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், பல்கலைக்கழக மாணவர்கள் 58 பேரைக் கொண்ட குழுவுடன் ஆய்வொன்றுக்காக உதுவம்கந்த பகுதிக்கு சென்றிருந்த அவர் நேற்று பிற்பகல் பாறையிலிருந்து வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-7)

## யாழ்., கிளிநொச்சியைச் சேர்ந்த 8 பேர் தமிழகம் சென்றடைந்தனர்

இரண்டு மாதக் கைக்குழந்தை உள்ளிட்ட 8 பேர் இலங்கையில் இருந்து ஏதிலிகளாக தமிழகத்தை சென்றடைந்துள்ளனர்.

குறித்த எட்டு பேரும் கடந்த 3 தினங்களுக்கு முன்பாக மூன்றாம் மணல்திட்டு பகுதியில் படகு செலுத்துனர்களினால் இறக்கிவிடப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில் தமிழக கடலோர பொலிஸாரால் 2 மாத கைக்குழந்தை உள்ளிட்ட 8 பேர் நேற்று அதிகாலை மீட்கப்பட்டனர்.

கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்டவர்கள் மண்டபம் ஏதிலிகள் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு ஏதிலிகளாக சென்றடைந்தவர்களின் எண்ணிக்கை 134 ஆக உயர்ந்துள்ளது. (ம-7)

## நாட்டில் இன்றும் 3 மணி நேர மின்வெட்டு

நாட்டில் இன்றைய தினம் 3 மணித்தியாலங்கள் மின் துண்டிப்பு அமுலாக்கப்படவுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு இணங்க இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த ஆணைக் குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய A முதல் L மற்றும் P முதல் W வரையான வலயங்களிலும் காலை வேளையில் 1 மணித்தியாலமும் 40 நிமிடங்களும், இரவு வேளையில் ஒரு மணி நேரமும் 20 நிமிடங்களும் மின் துண்டிக்கப்படவுள்ளது.

அதேநேரம், கொழும்பு, முன்னுரிமை வலயங்களில் காலை 5.30 மணி முதல் 8.30 மணி வரையான காலப்பகுதியில் 3 மணித்தியாலங்கள் மின் துண்டிப்பு அமுலாக்கப்படவுள்ளது.

இதுதவிர M,N,O,X, Y,Z ஆகிய வலயங்களில் அதிகாலை 5 மணி முதல் காலை 8 மணி வரையான காலப்பகுதியில் 3 மணித்தியாலங்கள் மின் துண்டிக்கப்படவுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)

## நீர் விநியோகம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நீர் வழங்கல் திட்டத்திற்கான நீர் வழங்கல் பிரதான [illegible] பணி மற்றும் நீர்க்குழாய் சுத்தம் செய்தல் பணிகள் காரணமாக இன்று திங்கட்கிழமை நீர் வழங்கல் சேவை இடைநிறுத்தப்படும் என தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். பிராந்திய முகாமை[illegible] ஜெகதீசன் அறிவித்துள்ளார். (4)

## அதிக கட்டணம் வசூலித்த பஸ்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட அதிக கட்டணம் வசூலித்த நூற்றுக்கும் மேற்பட்ட தனியார் பஸ்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது இந்த் பஸ்கள் அடையாளம் காணப்பட்டதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிலான் மிரண்டா தெரிவித்துள்ளார்.

நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட அதிக பணத்தை வசூலித்தமை கட்டண விபரங்களை காட்சிப்படுத்தாமை, பயணச்சீட்டுக்களை வழங்காமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் குறித்த தரப்பினர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் இத்தகைய சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு இணையாக் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொழும்பிலிருந்து யாழிற்கு அத்தியாவசியப் பொருட்களை எடுத்துவர சரக்குப் புகையிரத சேவை

## யாழில் அமைச்சர் பந்துல



(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்துக்கான அத்தியாவசியப் பொருட்களை கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்காக சரக்கு ரயில் சேவைகளைப் பயன்படுத்த திட்ட முன்மொழிவுகள் புகையிரதத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் இந்தச் சேவையை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம் எனப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள்|அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

நேற்று யாழ்ப்பாணம் பிரதான புகையிரத நிலையத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வரலாற்றில் முதல் தடவையாக யாழ்.மக்களைக் கருத்திற் கொண்டு அதிகளவான சேவைகளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துள்ளோம்.

புதிதாக காங்கேசன்துறை-கிளிநொச்சி அறிவியல் நகருக்கு இடையிலான "யாழ் ராணி" சேவை, தடைப்பட்டிருந்த இரவு தபால் சேவை மீள ஆரம்பம், உத்தரதேவி மற்றும் கடுகதி சேவைகளின் தரிப்பிட நிலையங்களை அதிகரித்துள்ளமை உள்ளிட்டவற்றைச் செயற்படுத்தியுள்ளோம். இவற்றுடன், யாழ்ப்பாணத்துக்கான அத்தியாவசியப் பொருட்களை கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்காக சரக்கு ரயில் சேவைகளை பயன்படுத்த அங்கஜன் இராமநாதன் கோரிக்கை விடுத்திருந்தார். அதற்குரிய திட்ட முன்மொழிவுகள் புகையிரத திணைக்களத்தால் முன்னெடுக்கப்படுகிறது. இதனடிப்படையில் இந்த சேவையை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம்.

பேருந்து, முச்சக்கரவண்டி உள்ளிட்ட தனியார் போக்குவரத்துச் சேவைகளின் கட்டண நிர்ணயத்தை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மேற்கொள்ளும் முச்சக்கர வண்டிகளின் கட்டண அறவீடு தொடர்பாகச் சட்டத்திருத்தமொன்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு விலை நிர்ணயம் செய்யப்படும் என மேலும் தெரிவித்தார். (4-18-33-104)

# நுரைச்சோலை வழமைக்கு திரும்ப மேலும் இரு வாரங்களாகும்

(கொழும்பு)

நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தை தேசிய மின்கட்டமைப்பில் இணைப்பதற்கு மேலும் இரண்டு வாரங்கள் செல்லும் என இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த மின்னுற்பத்தி நிலையம் நிர்மாணிக்கப்பட்டு 12 வருடங்கள் கடந்துள்ள நிலையில் அதன் ப்ராமரிப்புப் பணிகள் சீன பொறியியலாளர்களால் மாத்திரம் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (4)



செஞ்சிலுவைச் சங்கம் மூலம் நடத்தப்பட்ட விசேட பயிற்சியில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நேற்று யா/ நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையில் இடம்பெற்றது.

படம் (மகாலிங்கம்)

# போக்குவரத்து வசதிகள் இன்றி மாந்தை கிழக்கு மக்கள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு செல்வபுரம் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் வீதிகள் செப்பனிடப்பட்டு வசதிகள் நிறைந்ததாக இருந்தாலும் பேருந்து போக்குவரத்து வசதிகள் எதுவும் தமது கிராமத்திற்கு செய்து கொடுக்கப்படவில்லை என கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர் குறித்த பகுதி மக்கள் மீள் குடியேறி 10 வருடங்கள் கடந்தும் ஒழுங்கான போக்குவரத்து வசதிகள் இன்றி பெரிதும் அல்லல்படுவதாக தெரிவித்தனர்.

எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு தங்களுக்கு ஆடம்பர வசதிகளை செய்து தராவிட்டாலும் போக்குவரத்து போன்ற பொதுவான வசதிகளையாவது செய்துதர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(4-315)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 400 | 400 | 450 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | 180 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 450 | 500 |
| தக்காளி | 400 | 350 | 300 | 360 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 100 | 300 | 200 |
| கோவா | 350 | 350 | 400 | 450 |
| கரட் | 300 | 340 | 350 | 400 |
| பூசணி | 130 | 100 | 120 | 120 |
| புடோல் | 100 | 140 | 120 | 160 |
| வாழைக்காய் | 150 | 160 | 150 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 400 | 500 |
| பெரிய வெங்காயம் | 200 | 190 | 160 | 200 |
| பாகற்காய் | 450 | 400 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 80 | 150 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 200 | 200 |
| பயற்றங்காய் | 200 | 180 | 120 | 150 |
| லீக்ஸ் | 300 | 250 | 180 | 300 |
| பீற்றூட் | 160 | 200 | 160 | 200 |
| கறிமிளகாய் | 600 | 1000 | 700 | 800 |
| முருங்கைக்காய் | 350 | 400 | 400 | 350 |
| போஞ்சி | 600 | 400 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 400 | 350 | 350 | 400 |
| கீரை - 1 பிடி | 140 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 65 | 50-70 |
| இராசவள்ளி | 200 | 350 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 300 | 400 |
| முள்ளங்கி | 120 | 150 | 120 | 250 |
| பொன்னாங்கண்ணி | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 25 | 100 | 40 | 40 |
| ஈரப்பலா | 100 | 80 | 120 | 120 |

# 'அறவழி போராட்டக்காரர்களை உடனடியாக விடுவியுங்கள்'

## மன்னாரில் கவனயீர்ப்புப் போராட்டம்




(மன்னார்)

பயங்கரவாத தடைச் சட்டத்தை உடனடியாக இரத்து செய்ய கோரியும் இலங்கையில் இடம்பெற்ற ஜனநாயக போராட்டங்களில் கலந்து கொண்ட போராட்டக்காரர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரியும் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்திற்கான ஒருங்கமைப்பில் நேற்று அடையாள கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

குறித்த போராட்டத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட தரப்பு தமிழர் என்ற வகையில் பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக இல்லாதொழிக்க வேண்டும் எனவும் ஜனநாயக அறவழிப் போராட்டத்தில் கலந்து கொண்டமைக்காக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் மாணவ செயற்பாட்டாளர்களையும் இளைஞர்களையும் உடனடியாக விடுதலை செய்யக் கோரியும் அவர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் [illegible] கோரிக்கை விடுத்திருந்தனர். (4-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7 பேர் அனுமதி...

டுள்ள குறிப்பில் தெரிவித்துள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கொரோனா தடுப்பு விடுதியில் தொற்றாளர்கள் 7 பேருக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

அவர்களில் கர்ப்பவதிகள் இருவர் உள்ளடங்கலாக பெண்கள் நால்வரும் ஆண்கள் மூவரும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## வவுனியாவில்...

றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து ஏ9 வீதியூடாக கொழும்பு நோக்கிப் பயணித்த லொறியுடன் அதற்கு எதிர்த் திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தானது வவுனியா ஏ9 வீதி தேக்கவத்தை பகுதியில் இடம் பெற்றதுடன், இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 22 வயதுடைய ஆனந்தகுமார் கேதீஸ்வரன் என்ற இளைஞன் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

குறித்த லொறியானது சட்ட விரோதமாக கால்நடைகளை கொழும்பிற்கு ஏற்றிச்சென்ற வேளையே இவ்விபத்து சம்பவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அரசியலிலி...

அதுவரை நான் போகமாட்டேன்" என அவர் கொழும்பு ஊடகமொன்றிற்கு தெரிவித்துள்ளார்.

கட்சியை வழிநடத்த தான் தேவையா என்பதை பொதுஜன பெரமுனதான் முடிவு செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

"அதை கட்சி முடிவு செய்யும். அப்படி இல்லாவிட்டாலும், நான் ஒரு சட்டத்தரணி. என்னால் நீதிமன்றங்களில் பணியாற்ற முடியும். தேவைப்பட்டால், நான் செல்ல தயாராக இருக்கிறேன்" என்றும் தெரிவித்தார். (ம-7)

## சேகரிக்கப்படும்...

திகதி முதல் அமுலாகும் வகையில், முட்டைக்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி வெள்ளை முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 43 ரூபாயாகும்.

கபில நிற முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 45 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை மீறி முட்டையை விற்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ம-7)

## இலங்கையின்...

விவகாரம்பாரிய இராஜதந்திர மோதலை ஏற்படுத்தாது என நம்புவதாக சுற்றுலா அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக அஹமதாபாத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார். சீனா இலங்கையில் நிறைய முதலீடுகளை செய்துள்ளது.

அத்துடன், கடந்த காலங்களில் அதன் தேவைகளை புரிந்து கொண்டு வருகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் வெளிவிவகார அமைச்சரும் இந்திய அரசாங்கத்துடன் தொடர்ந்து தொடர்பில் இருப்பதாக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ கூறினார். (ம-7)

## உடனடியாக...

அநுராதபுரம் கோல்டன் மெங்கோ மண்டபத்தில் நேற்று நடைபெற்ற அநுராதபுரம் மாவட்ட அபிவிருத்தி சபையில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

இன்று நாட்டு மக்கள் மிகுந்த அழுத்தத்தில் உள்ளனர். வரலாற்றில் இத்தகையதொரு அழுத்தம் ஏற்பட்டதில்லை. அந்த நிலையிலிருந்து நாம் மீள வேண்டும். கடந்த வருடத்தை விட நமது பொருளாதாரம் 8 சதவீதத்தால் குறையும். இது வேகமாக இடம்பெறுகிறது. அதன் பிரதிபலனை அனைவரும் அனுபவிக்க வேண்டிவரும். இவ்வாறு நிகழும்போது, நாம் அதிலிருந்து எவ்வாறு மீண்டு வருவது என்று சிந்திக்க வேண்டும். இந்தப் பொருளாதார வளர்ச்சியை எவ்வாறு முன்னெடுப்பது என்று பார்க்க வேண்டும்.

குறிப்பாக உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. என்ன குறை இருக்கிறது? என்ன செய்ய வேண்டும்? என்பதை உங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்துங்கள். அவர்கள் அதுபற்றி பாராளுமன்றத்தில் பேசுவார்கள். இவை அனைத்தையும் ஒன்றிணைத்துக் கொண்டு இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்கலாம்.

மேலும், கீழ்மட்டத்தில் ஏராளமான அரச அதிகாரிகள் உள்ளனர். ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு சுமார் 09 அதிகாரிகள் இருப்பதாக நான் நினைக்கிறேன். அவர்களது கிராம உத்தியோகத்தர் பிரிவைப் பிரித்து ஒவ்வொருவரும் பங்களிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். வேலை செய்ய முடிந்தால் வேலை செய்யுங்கள், முடியாவிட்டால் வீட்டிற்குச் செல்லுங்கள். நாங்கள் வேலை செய்யாமல் பணம் வழங்கத் தயாராக இல்லை. அந்த பொறுப்பை மாவட்ட செயலாளர் ஏற்க வேண்டும். ஏனென்றால் நாங்கள் யாருக்கும் இலவசமாக உணவளிக்க முடியாது. ஏதாவது செய்ய வேண்டும். என்னாலும் இலவசமாக சாப்பிட முடியாது. இந்த நாட்டை முன்னேற்றாவிட்டால் நானும் வெளியேற வேண்டும். எனவே முதலில் கிராமத்தில் இருந்து ஆரம்பிக்கலாம் என்றார். (ம-7)

## 253 ரூபாயால்...

ஒரு லீற்றரின் விலை 87 ரூபாயிலிருந்து 340 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலை 253 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. (ம-7)

## நெருக்...

பல்ல, நானும் முந்தைய அரசாங்கம் உட்பட அனைவரும் பதில் சொல்ல வேண்டுமென மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ செய்ய வேண்டியதை முடித்திருக்க வேண்டும். எவ்வாறாயினும் அவர் ஒரு அரசியல்வாதி அல்ல. நாட்டை விட்டு செல்வதற்கு முன் கோட்டாபய ராஜபக்ஷ என்னிடம் ஆலோசித்திருக்கவில்லை. அவர் சென்றிருக்கக் கூடாது.

எனினும் அவர் முடிவு செய்துவிட்டே, 'நான் போகிறேன்' என என்னிடம் கூறினார். நான் அதற்கு பதிலளிக்கும் வகையில் எதுவும் சொல்லவில்லை என மகிந்த கூறினார்.

"கோட்டாபய ராஜபக்ஷ நிர்வாகத்தின் கீழ் மே மாதம் வரை நான் பிரதமராக இருந்தேன்" போகலாமா என்று அவர் என்னிடம் கேட்டிருந்தால், நான் வேண்டாம் என்று சொல்லியிருப்பேன்.

நாட்டின் அனைத்து நெருக்கடிகளுக்கும் கோட்டாபய ராஜபக்ஷ பொறுப்பல்ல. இதற்கு நான் மற்றும் முந்தைய அரசாங்கங்கள் உட்பட அனைவரும் பதில் சொல்ல வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக, அவர் (கோட்டாபய) தான் நம்பிய நிபுணர்களின் ஆலோசனையின் பேரில் செயற்பட்டார். எனவே, அவரைக் குறைகூற முடியாது..(இதில் மத்திய வங்கியின் முந்தைய ஆளுநர்கள் குறிப்பிடப்படுகின்றனர்).

அவர் பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது சிறந்த நிர்வாகத் திறமையை வெளிப்படுத்தினார். ஜனாதிபதியாக அவர் கடுமையான அழுத்தங்களுக்கு உள்ளானார்.

முன்பெல்லாம் அவர் ஒரு கடும்போக்குவாதியாக இருந்தார். ஜனாதிபதியானவுடன் அவர் மென்மையாக மாறினார். அவர் செய்ததை தொடர்ந்து செய்திருக்கக்கூடாது, ஆனால் அவர் அரசியல்வாதி அல்ல.

எவ்வாறாயினும், அவர் முன் இருந்த பணியை சரியாக முடித்திருக்க வேண்டும் என்றார்.

"விரைவான பொருளாதார மீட்சியைக் கொண்டு வரக்கூடிய ஒரேயொரு திறமையான நபர் ரணில் மட்டுமே. அதனால்தான் நான் அவர் பதவி ஏற்றதை ஆமோதித்து அவருக்கு எனது ஆதரவை தெரிவித்தேன்" என்றார். (ம-7)


























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுநீரகம் தேவை

O இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
(45 வயதுக்கு உட்பட்டவர்)
தொடர்புகொள்ளவும்.
(12516)

**077 076 0383**



**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**27.08.2022**

**வங்கியியல் கற்கைநெறிகள்**
**Banking Courses**
**IABF & DABF**
(Tamil & English Medium)
Qualification:- G.C.E O/L
6 Passes with 5
Credits including Maths.

**கணக்காளர் கற்கைநெறிகள்**
**Chartered Accounting Courses**
Business level - 1, II
(Tamil & English Medium)
Qualification:- G.C.E A/L 3 Passes.

**தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு**
**aat (Sri Lanka)**
**AA1, AA2, AA3)**
Qualification:- G.C.E O/L 6 Passes
Medium - Tamil & English

**G.C.E A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்**

**Certificate Course in English**
20 Batches have successfully Completed the Course

Further Details: **Jaffna College**
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382, 021 222 9149
077 440 5917 (C-4773)


## சீனக்கப்பல் வருகை தொடர்பில்

# இலங்கையின் நிலைமையை இந்தியாவுக்கு எடுத்து கூறவேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த

(கொழும்பு)

சீனக் கப்பலிற்கு முதலில் அனுமதிய ளித்துவிட்டு பின்னர் அதன் வருகையை அரசாங்கம் தாமதப்படுத்த முயன்றமை குறித்து முன்னாள் .பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கடும் விமர்சனத்தை முன் வைத்துள்ளார்

முதலில் நீங்கள் கப்பல் வருவதற்கு அனுமதித்துள்ளதாக தெரிவிக்கீன்றீர்கள் பின்னர் இல்லை என தெரிவிக்கின்றீர்கள் என சுட்டிக்காட்டியுள்ள அவர் எங்கள் நிலைப்பாட்டை நாங்கள் இந்திய அதி காரிகளிற்கு கூட தெளிவாக எடுத்துக் கூறியிருக்கவேண்டும் எனவும் குறிப்பிட் டுள்ளார்.

ஊடகமொன்றுக்கான பேட்டியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கோட்டபாய ராஜபக்ஷ பதவி விலகு வதற்கு காரணமான ஆர்ப்பாட்டங்கள் குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர் ஆர்ப்பாட்த்தில் ஈடுபட்டவர்கள் வன் முறைகளில் ஈடுபடுவது இது முதல் தட வையில்லை என தெரிவித்துள்ளார்.

அவர்கள் ஒருபடி பின்நகர்ந்திருக் கவேண்டும் தங்கள் நடவடிக்கைகளை எப்போது நிறுத்துவது என்பது அவர் களிற்கு தெரிந்திருக்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுக்கும் நடவடிக் கைகளிற்கு எனது ஆதரவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்தை அர சாங்கம் நாடியது குறித்து கருத்து தெரி வித்துள்ள அவர், நானும் அவர்களின் உதவியை நாடியிருப்பேன் என தெரி வித்துள்ள அவர்களின் உதவியை நாட வேண்டாம் என்பது அரசியல் சுலோகமாக மாறியிருந்தது பலர் அவர்களை எதிர்த் தார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

அனைத்து கட்சி அரசாங்கத்தை வர வேற்றுள்ள மகிந்த ராஜபக்ஷ அனைவரும் நாடு குறித்து சிந்திக்கவேண்டும் அனை த்து கட்சிகளும் குறிப்பிட்ட காலத்திற்கு ஒன்றிணைந்து பணியாற்றவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (ம-7)


## காணி விற்பனைக்கு

58/1, பழம் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம் என்ற முகவரியில்
3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(பலாலி வீதி, திருநெல்வேலி
கெற்றப்போல் சந்தியிலிருந்து பழம்
வீதியில் சுமார் 200 m தூரம்
அளவில்)
(C-4766)

தொலைபேசி:
**077 977 3732**



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோண்மலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (12534)



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12496)

**076 825 7716** (ஆகாஸ்)


# மரண அறிவித்தல்



பிறப்பு 21 - 04 - 1964

இறப்பு 21 - 08 - 2022

## ஆறுமுகம் சங்கரநாதன்

(புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க முன்னாள் ஊழியர்)

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரம் காளிகோவிலடியைப் பிறப்பிடமாகவும் தாமரை வீதி வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சங்கரநாதன் அவர்கள் நேற்று (21.08.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - பொன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் கிருஸ்ணசாமி - யோகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயச்சித்திரா அவர்களின் அன்புக் கணவரும் ரோணிசன், ஜெயசுயா, விதுஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும் தணிகாசலம்பிள்ளை, ஜெயகுணதேவி, மங்கையற்கரசி, தவயோகராசா, வீரகத்திப்பிள்ளை, ஞான உதயமலர், நவகுணநாதன் (பிரான்ஸ்), விக்னேஸ்வரன் பெருமான் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அருட்செல்வம் (பிரான்ஸ்), கிருஸ்ணகுமார் (அவுஸ்திரேலியா), சுமித்தரா (அவுஸ்திரேலியா), நந்தகுமார், கெமிதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.08.2022) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (12515)

தாமரை வீதி,
வண்ணார் பண்ணை. **077 887 9812** தகவல் - குடும்பத்தினர்


உ

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்
சைவப் பெருவள்ளல்
## சேர். பொன். இராமநாதன்
அவர்களின் உபயமாக விளங்கும்
## அருள்மிகு ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயம்
## மண்டலாபிஷேக பூர்த்தி விழா
**23.08.2022 (நாளை)**
செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணியில் இருந்து

### நிகழ்வுகள்

1. சங்காபிஷேகம்
2. யுகபுருஷர்களான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களதும் சைவப்பெருவள்ளல் சேர். பொன். இராமநாதன் அவர்களதும் திருவுருவச் சிலைகளின் திறப்பு நிகழ்வு.
3. வேதாகம பாடசாலை ஆரம்ப நிகழ்வு
4. கலைஞர்களைக் கௌரவித்தல்
5. சிறப்புரைகள்
6. மஞ்சத் திருவுலா.
7. நன்றியுரை

(12479)

பரமேஸ்வராக் கல்லூரி
இயக்குநர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.